429

பிஸ்மில்லாகி.

# முனாஜாத்.

இஃது

திருநெல்வேலியைச் சேர்ந்த மேலப்பாளையம்

கோஜா அஹம்மது பிள்ளை

குமாரர்

கோஜா முஹம்மது ஹுசைன் லெப்பை

அவர்களால்

இயற்றப்பட்டது

---

நீமா பிரஸ்

திருப்பாதிரிப்புலியூர்.

1913

Q7
N13
142494

( பிஸ்மில்லாஹி )

குத்துபலகுத்தாப் செய்யிதுமுஹிய்யித்தீனப்துல்காதிறு ஆண்டவரவர்களின் அரியபெரியகாரணங்களைப்பாடிப் புகழ்ந்து துஆ கேட்கும்பாசுரம்

பூமேவுகந்தமென வெங்கும்நிறை பரி
பூரணானந்த னொளிவிற்
பூத்திலங்கிடும் வேதகாத்திமுல்லன் பியா
புந்திமகிழ் நந்தனிகளிற்
பொன்னுலகதாய்பாத்தி மாறலியல்லாஹுன்ஹும்
புகழருவஷின் புலியலியெனும்
பூபருந்தருமகார் தம்மிலசனூர் மரபில்
பூதலமெலாம் வாழ்த்தவே

மாமேவுஜய்லானிதன்னிலபு ஸ்ாலிஹின்
மகவாயுதித்த மதியே
மகராஜ-ராஜர் பணி பகுதாது நகர்வாச
மகபூபு-சுபஹானியே
மாதாவின் கெற்பத்திருந்து புலியாய் வெளியில்
வந்திருளில் கொடிய முனியை
வதைத்துமீண்டுங் கெற்பதானத்திலான பூ
மானே தயாரத்னமே

காமேவு செங்கையிர் சுல்தான் முகியித்தீன்
கவுதுலகுலம் பாதுஷா
காஜா முஹிய்யித்தீன் தருவேஷ்முகியித்தீன்
கன ஷெய்க் முகிய்யித்தீனே
கலாமாகுமங்கடலே சலாமுடன் கலிறுநபி
ஹக்கனருளாலூட்டவே
களித்துண்டு மாதா வயிற்றில்வளர்ந்தசிங்
காரரே ஜகதகுருவே

கோமானே அவ்லியா பரவா முகிய்யித்தீன்
மஃதூம் முகிய்யித்தீனே
குத்துபுலகுத்தாப் செய்யி தப்துல்காதிறு வொலீ
குணமேவுமாணிக்கமே
குவலயந்தனில் ஷறஐ தூக்கிநிலைநாட்டிய
கோகனக கைதஸ்த்த கீர்
குருவினைச்சுமந்தவர்க் கருளுலகைவெளியாக்குங்
குங்குமத்தார் புயத்தீர்

தேமேவுசோலைமதி னமேவு மகுமூதீன்
தீனுக்குவுயிராகிய
தேவரீர் பக்கீர் முகிய்யித்தீனே ஹிஜ்ரி
தெய்வநானூர் றெழுபதில்
சிறந்தறமுலான்மாத மாதிதேதியிலுதயஞ்
செய்தமாதவநாதரே
சித்தர்மகிழ்முத்தரே யையாறு நோன்பையுஞ்
செகமெலாந் தெரியவைத்தீர்

சீமானிணை துணையிலானருசில் விளையாடுஞ்
செல்வமே கல்பினொளிவே
திக்குத்திகாந்தமுங் கொண்டாடும் வல்லநீர்
ஜெயசிங்கமான நீரே
தீன் தீன் முகியித்தீன் ஒலிமார்கள் புஜமீது
தினந்தங்கு தூயதாளீர்
ஷெய்குஹம்மாதுகை குகையைப்போக்கிரட்
சித்த சுத்தத் தேவரீர்

திமைகளகற்றியா ளுங்கத்தனைத்தினந்
தினந்துதிக் குந்தகுதியீர்

ஜெயரீடுவிரதத்தினையத்தை மாற்றினீர்
செல்வழியிலெறுதோதியச்

செப்பாலகத்தின் மேனிலைதரித்தறபாத்தை
தெரிசித்த நேத்திரத்தீர்

செத்தவர்க் குயிரளித் தெழச்செய்தமாதவத்
திவ்வியானந்த ரூபிர்

கோமேவு காண்டத்தில் மெய்யோதிகள்ளரை
குணமன்னராக்கிவைத்தீர்

குதாவருள்குலாவுமணி நவரத்ன தீபமே
கோடையிடிபோல் குமுறிய

கொடிய ஜின்கொண்டபைங்குமரியைமீட்டினீர்
குழந்தையாயிருந்தகாலங்

கூடியரிமாவுடன் யிடியுண்டு பொடியான
கோவைமுத்தந் தந்தநீர்

பாமாலை சோடிக்கும் புலவோரகத்திலம்
பரவு மறிவானந்தநீர்

படபடத்தேபடியிலுயிரற்றுவிழ்ந்த செம்
பருந்தெழுந்தேகவைத்தீர்

பாரின்மைமை பெற்ற பெண்ணையாணாக்கினீர்
பச்சைக்கலையுகந்தீர்

படநாகமாடிப் பணிந்து சோதனை செய்த
பாத மோர்கானிணைந்தால்

போமேபவங்களெல்லாந்தீயில் பஞ்சுபோல்
பொய்யாதவாய்மையுள்ளீர்

புகழோங்கு கவுதை கண் ணுற்றுபலகல்வியும்
புலமையும் பூத்தவாழ்வே

பொற் புரிசை சூழ்கூடலூர் மேவு முசுலீங்கள்
பூரிக்கதங்கள் பெயரால்
பூசிக்கும்பள்ளியில் வாசிக்கும் மதுரசா
புறுகானிலதிமதுர பூங்

காமேவிநின்று பலகனி வேண்டு வார்க்கருள்
காட்சியாய் மாட்சிமைமிகுவ்
கலாமைப்பயிற்றிடுமிலப்பை ஹாபிலு ஆலிம்
கீர்த்திபாய் திருநெல்வேலிக்

கனநகரை சேர்மேலைப் பாளயத்தார்மனங்
களிக்கும்ப்ரசங்கநிதியாய்
கற்பகச்சோலைசூழ் கண்ணனூர் புகாரிதங்
கள் கலீபாவாகவும்

மாமாதுமருமகளுடன் கூடிவிளையாடும்
மனையாளனுகவுஞ்சீர்
மலியவந்தருள் கோஜா அருமருப்பிள்ளையின்
மைந்தனெனவந்த கோஜா

முகம்மதுஹாசைனுக்கு அருள்செயும் வள்ளலே
வாழ்வுமிகதந்தாளுவீர்
மதுரகவி சதகு முகம்மது அப்துல் காதிர்துதி
மதியே முஹிப்பித்தீனே
(பிஸ்மில்லாஹி.)

பல்லவி.

ஆதாரம் வேறிலே பொற் பாதார விந்தமலர்
தாதா தந்தாளுமையா காதாமுகியித்தீனே

அநுபல்லவி

கீதாப்ர சங்கர்துதி· வேதாந்தத் துங்கநிதி
நாதாகவந்த மகு மூதாதம்பேரனுரே [ஆ]

சரணங்கள்

1 மாதாபிதாகுரு தெய்வமே தங்களை
மறவாதிருக்க வரந் தரவேண்டுமெங்களை
தீதாகியவழியில் போகாமலேதடுக்கும்
தீனுக்குயிர்கொடுத்த கோனே யற்புதத்தேனே
ஓதாநின்ற புறுகான் வேதாதி பாதம்பேரா
போதானந்த வொலிகள் புஜத்தில்தங்கியபாதா
ஆ
2 மன்னரபூஸாலீஹு தன்னகத்து றுமேரே
மவுனமணி விளக்கே கவனத்தெளிவொளிவே
சொன்னயப்பாவலோர் முன்னலங்காரவாழ்வே
சோதிப்பரம் பொருள ஞதிக்கருணை பூத்து
அன்னை வயிற்றிருந்து மின்னற்புலியாய் பாய்ந்து
உன்னுமுன் கொடுப்பேயை சின்னம்பட வதைத்தீர்
ஆ
3 மஹ்பூபுசுபுகானி மஷ்ஷுக்குறப்பானி
மகுதூமுகியித்தீனீ வரிசைமிகும் சுல்தானி
பகுதாது ராஜதானி பதிமேவுங்கைலானி
பாவாமுகியித்தீனீ பகிர்கௌதுசமதானி
அஹதினில் சமாதானி அறிவிற்கறிவாம் ஞானி
மிகுநா தலர்ந்தமேனி மீருன்முஹியித்தீனே
ஆ
4 பூமாவுடனேகூடி பொடியுண்டதண்டரள
மாமாலைதந்தகையீர் கோமான்முகியித்தீனே
சீமானே ஜின்கொண்ட தெரிவையைத்தருவித்தீர்
செத்தார்க்குயிரளித்தீர் தஸ்தகீர் குதுபுலகுதாப்

தேமாங்கனி க்கொழுஞ்சி சித்த முகந்து தந்த
காமாபெண்ணையாளுக்கிய நாதாவோகவுதுலகுலம்

ஆ

5 பாருளார் மகிழுங் கூடலூருளார் புகழுமேலம்
பாளயத்தாலீம் கோஜா முகம்மதுஹாசைனுக்கருள்
சீருளீர்சதகுமுகம் மது அதுல் காதிர்சொல்லும்
சிறப்புளீர் வரிசையுள்ளீர் ஜெகதசற்குருவானீர்
திருமெங்கள் கலியை அருந்துதிக்கும் ஒலியே
வாரும் அருசுப்புலியாமலியார் மரபிலுற்றீர்

ஆதாரம் வேறில்லை பொற் பாதார விந்தமலர்
தாதா தந்தாளுமையா நாதாமுகியித்தீனே

# முஹ்யித்தீன் ஆண்டவர்கள் பேரில்

# கோஜா முகம்மது ஹுசைன் பாடிய சந்ததி அம்மானை

## நாயன் துதி.

ஒருவேன் அல்கம்துலில்லா உறுதியான வாக்குடன்
ஆதியான ஹாதியே அருள் சொரிந்தருள்புரீ
சோதியானனன்னபிக்கு சொந்தமாகவே நிதம்
நீதமான ஆலுமிஷ்டர் இவர்கள்மீதுசல்லியா 1

உந்தனை யுகந்தபின்பு ஒப்பிலாத அஹ்மதை
சொந்தமாகவேதுதித்து சொன்னபின்னர்யானுமெஞ்
சிந்தையிற் கலக்கம்தீர்ந்து செவ்வையாயுரைக்கவே
யிந்தனேரம் கேட்பதை யிறையவா கபூலுசெய் 2

யிறையவா கபூலுசெய்து எந்தனுக்கருள்புரி [ம்
மறைநற்புறுகானுடையசொந்த மகிமைக்குரியநாதரா
குறைவிலாத ஹாமிதான கோமான்நபியின்புகழியா
லுறைக்குமிந்த பாடலுக்கு உதவிசெய்யென்ஹக்கனே 3

வேறு

முன்னவனேயாமுசவ்விறு காலிகுஉனக்கேபுகழ்
தன்னவனே தனியானவனே பெந் தயாபரனே

பின்னவனே பிரியாதவனே பிலஃானவனே
யென்னிலிருந்தருள் தருபவனே ரகுமானவனே . 4

முத்தானனன்னபி சோதிமுகம்மது முர்சல்களுக்கே
வித்தானநாயகனண்மணியாம் பெரியோன் தூதராய்
எத்திசையோர் புகழும் மரசாய்வந்து எங்குமணம்
பெற்றமுகம்மது மீத்சலவாத்தருளாண்டவனே 5

மேலான தீந்தனக்கதிபதியாய் வரும்நபிதமக்கு
ஆலாகவந்தனுஜஜமுகள்மீது மவர்தோழர்கள்
சாலீஹீனனேவர்கண்மீதும் ரகுமத்தருள்சொரிவாய்
சாலார் முஹ்பித்தீன் சந்ததி முஞ்ஜாத்தைசாற்றுவ
[னே 6

அம்மானை

பிஸ்மில்லாஹிற்றகுமானிர்றகீமென்றோதலுடன்
இமலஃதயதை யென்னுளும் யான் மறவேன் 1

அல்லாகுபாறஹ்மான் அல்லும்பகலுமடியேன்
வல்லோனே யென்றிறைஞ்சி வரிசைபெறகெஞ்சுகிறே
[ன் 2

சங்கைநபியுல்லாமேல் சலவாத்து மோதிமிக
பொங்குசலாமுமுறைத்தாள் பூரணனே ரகுமானே 3

அங்கந்தெளிவானதுமாய் அருமதுக்குவந்த மறை
தங்குப்பொருளாமகனைத்தருவீர் முஹ்யித்தீனே 4

பாருலகிலெந்தனக்கு பலன்பெறுமாண் சந்ததியை
நேருடனே தந்தருளும் நேசர்முஹ்யித்தீனே 5

இருபதிக்குமிவ்வடியேன் எற்றமாயிருப்பதற்கு
அருமையாண் சந்ததியை அஃதிமுஃயித்தீனே 6

சாலிஹென்றபேர்விழங்கும் தாரணியொலிகளுக்கும்
ஆலிமெனுமவுலாதை அருளுமுஹ்யித்தீனே 7

வயது நெடுகமுடன் வாள்வணியுமவுலாதை
கைருடனே தந்தருள்வீர் காதிர்முஹ்யித்தீனே 8

ஈமான் தனம் பெற்றமக்களெந்தனுக்ருண்டாவதற்கு 9
சீமானிடங்கேட்டருள்வீர் செய்யிதுமுஹ்யித்தீனே

நாயனின்றஃமத்துடன்றுள் தோறும்மேன்மைபெறுஞ்
சேயதனை தந்துதவி செய்யுமுஹ்யித்தீனே 10

மாஹீர்ஹாதிக்கானஉல மாக்களுக்குவப்பாக
தாஹிரான அவுலாதை தாருமுஹ்யித்தீனே 11

தன்புசெய்த பாவியெனத் தள்ளாதிழிவுறவே
நம்பலுறும் சேயருள்வீர் நாதர் முஹியித்தீனே 12

மவுனசுழி வட்டமதிர் மாவுல்பஃறைப்பருகும்
ஒளகான வலதருள்வீர் றப்பன் முஹ்யித்தினே 13

சொல்லும் சலாதும் சலாமும் துய்யநபிக்குண்டாக
நல்லால்சஹாப்புக்குமே நாடுமுஹ்யித்தீனே 14

ஆமீன் ஆமீன் ஆமீன் அயாரப்பலாலமீன்
மூமீன் தனக்கருள்செய் மூமீன் முஹ்யித்தீனே 15

எந்தனுக்குந் தாய் தந்தைக்கு மென்னுடன் பிறந்தோருக்கும்
சொந்தஸவுஜா மக்களுக்குமதுய்யநபியொன்றருள்வாய் 16

செந்தமிழாலிக்கவியைச் செப்பு முகம்மதுசைன்
சிந்தை மகிழும் படியே செயருள்வாய் ரஹ்மானே 17

## இதுவும் அதுபோல்
### இன்னிசை

முந்தஒளிவில்தெளிவாய் முதலோன்திருதூதாய்
வந்தனபிபேரரேயிவ் வையகத்திலே யெளியேன்
சந்ததியின் காட்சிபெற சரணமலர் தாள்பணிந்தேன்
எந்தனுக்கருள்புரிவீர் எங்கள் முஹ்யித்தீனே 1

அனலிலிட்ட மெழுகதுபோல் ஐந்துபுலனுமுருகி
கனவிலுமுங்கள்பதம் காணமையலாகுதய்யா
எனதுமனநாட்டப்படி யெந்தனுக்காண் சந்ததியை
மனமிரங்கியருள்புரிவீர் மன்னர்முஹ்யித்தீனே 2

வஞ்சகமில்லாமல் தினம் மனமகிழ்ச்சியாயிருக்க
அஞ்சுநேரமும் தொழுது ஆதிரஃமத்ததனால்
சஞ்சலத்தை நீக்கியர்க்காண் சந்ததியுமுண்டாகி
கொஞ்சமேவேகிருபை செய்வீர்கோஜாமுஹ்யித்தீனே 3

கேட்டார்கட்கெல்லாம் கிருபையுடன் சந்ததியை
தேட்டமறவீயுமுங்கள் திருவடியை யான் துதித்தேன்
தாட்டிகமாயெந்தனுக்கு தருவீராண் சந்ததியை
நாட்டார்துதிக்குமெங்கள் நாதர்முஹியித்தீனே 4

என்னசெய்வேனென்றுநிதம் எண்ணியெண்ணி யேழைமனம்
புண்ணாய்வருகுதய்யா பொன்னடியைகாண்பதற்கு
என்னேரமுந் துதியோடிருக்கின்ற பையனுக்கு
நன்னேர்மைதாருமெங்கள் நாசிர்முஹியித்தீனே 5

நாடி துதித்திறஞ்சி நன்மை பெறவந்தவனே
வாடிமெலிந்துருக வைப்பதும் நற்காரியமோ
பாடி துதித்துரைக்கும் பையல் முகம்பார்த்திரங்கி
தேடியபடியருளும் தீன் தீன் முஹ்யித்தீனே 6

முத்தான நன்னபிதன் முண்டகப்பதமலரை
னற்றேளில் பெற்றெலிமார் நாயகமாய் வந்தவரே
சித்தடியான்துன்பம் ஜெகந்தனிலே தீர்வதற்கு
கத்தாவிடமருளும் காதிர்முக்யித்தீனே 7

எந்தனுக்கறிவருள்வீர் இன்ப பதுமருள்வீர்
சொந்தமென வெண்ணி சுகித்திருக்க வாழ்வருள்வீர்
சந்ததியருள்வீர் சலிப்பறவே யிப்பொழுதில்
வந்துதவி செய்யுமெங்கள் வள்ளல் முக்யித்தீனே 8

மங்கை மாநகரின் முகம்மத்ஹு சைன் தனக்கு
சங்கையுறும் தங்கள்பதம் தந்தருளயான்துதித்தேன்
யிங்கிதக் கவியா லெவரும் புகழ்ந்தேத்துகின்ற
திங்களொளிபோன்றகுரு சேகுமுக்யித்தீனே 9

வேறு அறுசீர்.

சென்னல்சூழ்ந்திலங்கும்யோக ஜெய்லானிநகரில்வாழும்
கன்னலாமபூசாலிஹின் கருணைசேர்மகவேயுங்கள்
பொன்னெனும்பாதகாட்சி பூணவேமுனுஜாத்தோதும்
சின்னவன்றனைக்காப்பாத்தும் செய்யிதுமுக்யித்தீனே (10

முற்றிற்று.

## இதுவும் அவர்கள் பேரில் பாடிய
## ஞானவின்னிசை

கல் அவூதுபில்லாகிமி னஸ்சைதானிற்றஜீமென்
றல்லும் பகலுமோதி றப்பைகொண்டேகாவலினால்
முல்லைநிகருன் முஹியித்தீன் மேலின்னிசையிஸ்
மில்லாஹிர்றஹ்மானிர்றகீம் மென்றதுடனேயுரைப்பேன் 1

ஆலம்களுக்கஸ்லாம் ஆலம்லாஹூத்திற்குருவாம்
தாலிலுயர்ந்தபொருள் தாவீமுகம்மதுக்கும்
மாலிக்குல்முல்க்காம மத்தீனாசலவாத்ததனை
காலஹூசலாமுடனே காரணஆல்ஸஃபுக்குமே 2

யெண்ணமுடியாப் பொருளாய் ஏகனரும்பொருளாய்
கண்ணிலடங்காயருளாய் காரணித்தசோபனமாய்
மண்ணுலகிலேயுதித்த மாதரிரசூல்பேரா
அண்ணலுரும்தாளருள்வீர் ஆதிமுஹ்யித்தீனே 3

மாமிகுந்தஜைலானியில் மகுபூபெனப்பிறந்தே
நாமம்முகியித்தீனெனவென் றுளும்மரசாள்பவரே
நேமமுடனெந்தனுக்கு நேர்பாதைகாட்டிமறை
ஈமான்பிலந்தருவீ ரெங்கள் முஹ்யித்தீனே 4

அஞ்சாறுமோர்குலையில் அழகாய் திரண்டிருண்டு
பிஞ்சாகிகாயதுமாய் பேதகமில்லாக்கனியாய்
துஞ்சாமலேகமலத் துள்ளுறைந்தமீமதனை
யெஞ்சாண்மகிழ்ந்திடவே யீயுமுஹ்யித்தீனே 5

பத்தோடெண்ணாயிரமாம் பண்பானஆலமதை
மத்தோடு ஸத்துறைப்பாம் மவ்ஸூலெனுமஸலை

ஐத்தானமுன்பொருளாம் சர்தார்முகம்மதுவால்
சுத்தமுடன் தந்தருள்வீர் சுல்தான் முஹ்யித்தீனே 6

உலகத்தாரெல்லோர்க்கும் உவப்பானமெய்ப்பொருளாய்
பெலமாய்வசித்திருக்கும் பெரியவனுதவிகொண்டு
ஒலிமாரெலாம் புகழும் ஓர்மையுள்ள சீர்மணியை
நலமாகதந்தருள நாடுமுஹ்யித்தீனே 7

இப்புவிக்குமப்புவிக்கும் இதியாசம்கற்றுணர்ந்து
அப்பியுததானமுட ஞசாரமாய்வழங்கி
ஹப்புடனேவல்ல குதாயின்தவ்ஹீதையுணர்ந்து
ஒப்பனையாகும்கனியை உகலுமுஹியித்தீனே 8

கெஞ்சும்பயல்தனக்கு கிருபைகடாக்ஷமீந்து
அஞ்சுமுருவாய்பொருத்தமானமஃகுக்கைகொடுத்தென்
சஞ்சலமெனும்கரையை சம்புதவியாலகற்றி
கொஞ்சுமணியைதருவீர் குதுபுயாமுஹியித்தீனே 9

சீவிதேசன்னிடத்தில் செய்யிதேகையுயர்த்தி
மேவிதுவாகேட்டிரங்கு மேன்மையிறசூல்வழியில்
பாவிதனையேத்தி பதமலரின்னிரமனை
தூவியெனைகாப்பாற்றும் துங்கமுஹியித்தீனே 10

ஈரூருக்கப்பால் இலங்கும்பொருளதனை
ஒரூர்வழியாலே உணர்ந்து அம்மகாமதிலே
சிராகவேதரித்து சிர்ருணமாவிளைய
நேராயருள்புரிவீர் நேசர் முஹியித்தீனே 11

துர்ச்செயல்களைப்புரிந்தேதுஷ்டனெனபேரெடுத்தேன்
நற்செயலுடையோரை நத்தாமற்பாவியானேன்
பர்ச்சரெனும்ஷைத்தான் பணிவிடைகளைவிலக்கி
நற்செயலைபூட்டுமெங்கள் நாதர்முஹியித்தீனே 12

மட்டியறிவுடைய மல்லனடர்ந்தேறும்
கெட்டோருரவழியூ கேட்பதுபோல்நாயனருள்
நிட்டையதிவாக்கி னிகழ்த்தும்முகம்மதுசைனை
ஸட்டமுடன்காப்பாத்தும் ஷாகுமுஹியித்தீனே 13

கண்பிழைகைகால்பிழையும் கற்பறுப்பாலேபுரியும்
என்பிழையுமிப்பயலை யீன்றவிருபேர்பிழையும்
நம்புமனையாள்பிழையும் நல்லமக்களின்பிழையும்
துன்பமறத்தீர்த்தருளும் தோன்றல்முகியித்தீனே 14

சல்லிஓசல்லிம்அலா சாஹிபிஹவ்லில்கவுதர்
வல்லேலர்ன்திருதூதர் வரிசைமுகம்மதுவாம்
வல்லாலிஒல்லஸ்ஹாப் வத்தாபியீனவஅஹ்
லில்லைபத்திகொவ்தினல்லம் லம்முகியித்தீனே 15

மேலப்பாளையம் வசிக்கும் காஜா ஹசன்லவ்வை லெப்பை
புலவர் அவர்களாலியற்றிய சாற்றுகவி
அறுசீர் விருத்தம்.

பார்பெருங்கதியின் மேலப்பாளையமதில்கோஜென்னும்
பேர்பெறும்அஹ்மதென பேர்பெறுமுகம்மதுசைன்சொன்ன
சீர்பெருங்கவிதைதன்னை சிறப்புடன்படிப்போரெல்லாம்
நேர்பெருமகவும்வாழ்வும் நித்தமும்பெறுவார்ஆமீன்

முற்றிற்று.

இந்த முனாஜாத்துகளை ஓர்மையுடன் இரங்கி படித்து வருவார்களாகில் துன்யாவுக்கும் ஆகிறதுக்கும் புண்ணியம் கொடுக்கப்படுவார்கள் இதில்பேர்வருவதில் ஆண் பெண் அவர் அவர்களின் பேர்களைவைத்து படிக்கவும்.

சோதிக்கப்பட்டது.